DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 85/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : பைரோஸ் (மருத்துவர்) (P.w.8)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of December 2025

(4வது எதிரி ஆஜர் . 1, 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.10.2019ம் தேதியன்று மதியம் 2.30மணியளவில் திருச்சுழி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது கண்டுகொண்டான்மாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அன்றே அடையாளம் தெரிந்த 3 நபர்கள் தனது வீட்டு அருகில் கட்டையை வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் இடது முன்கையில் சிராய்ப்பு காயம் இருந்தது. இடது கை மணிக்கட்டில் சிராய்ப்பு காயம் இருந்தது. ஏற்கனவே அவருக்கு ரத்தக் கொதிப்பு இருந்தது, அதற்கு அவர்

மாத்திரைகள் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார். அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். தோள்பட்டை முதுகிலும் வலி இருப்பதாக கூறியதால் அவரை நுண்கதிர் படம் எடுக்க அறிவுறுத்தினேன். ஆனால் அவர் நுண்கதிர் படம் எடுக்காமல் தன்னிச்சையாக மருத்துவமனையை விட்டு சென்றுவிட்டதால் அவருக்குஏற்பட்ட காயம் பற்றி என்னால் சான்று வழங்க இயலாது. (**மருத்துவமனையில் அனுமதித்தற்கான விபத்து பதிவேடு அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

ரத்தக்கொதிப்புக்கு சரியான சிகிச்சை எடுக்காவிட்டால் மயக்கம் வர வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. சிராய்ப்பு காயமானது மயக்கமாகி தவறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. தோள்பட்டை முதுகில் வலி இருப்பதாக சொன்ன நிலையில் நுண்கதிர் படம் எடுத்துப் பார்த்தால்தான் அங்கு காயம் ஏற்பட்டுள்ளதா என்று தெரியும் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி :–** அயர்ன் ரார்டு என்றால் இரும்பு கம்பி என்றால்

**பதில் :–** சரிதான்.

**நீதிமன்ற கேள்வி :–** விபத்து பதிவேட்டில் இரும்பு கம்பி மற்றும் கடப்பாரையால் அடிக்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால்

**பதில் :–** சரிதான், ஆனால் காயத்தின் தன்மை அந்த ஆயுதங்களை வைத்து அடித்ததாக இல்லை.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.